# பாராளுமன்ற செய்தி

செய்தி மடல்
11 வது தொகுதி
மே 2021



01 தேர்தல் சட்டங்களை சீர்திருத்துவதற்கான பாராளுமன்ற விசேட குழு கூடியது

03 கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை சபாநாயகர் சான்றுரைப் படுத்தினார்

07 பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்விகளை எழுப்பும் நடைமுறை

09 கொழும்பு துறைமுக நகரத்தில் முதலாவது முதலீட்டை மேற்கொள்ள இலங்கை முதலீட்டுச் சபை தயார் – அரசாங்க நிதி பற்றிய குழுவில் புலப்பட்டது

தொடர்பாடல் திணைக்களம்
இலங்கை பாராளுமன்றம



# தேர்தல் சட்டங்களை சீர்திருத்துவதற்கான பாராளுமன்ற விசேட குழு கூடியது

தற்பொழுது காணப்படும் தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் காணப்படும் குறைபாடுகளை இனங்காண்பதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட குழு, அதன் தலைவர் சபை முதல்வரும், வெளிநாட்டு அமைச்சருமான கௌரவ தினேஷ் குணவர்தன தலைமையில் முதன் முறையாக 17ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடியது.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதும், தேவையான திருத்தங்களை பரிந்துரை செய்வதும் இக்குழுவின் பொறுப்பாகும்.

பாராளுமன்ற விசேட குழுவின் பணிகள் தொடர்பில், அதன் தலைவர் தினேஷ் குணவர்தன குழுவின் உறுப்பினர்களுக்கு அறிவித்ததை அடுத்து, குழுவின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் முறை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார். புதிதாக பாராளுமன்ற குழுவுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களை தலைவர் வரவேற்றார். இந்தக் குழு நியமிக்கப்பட்டமை தொடர்பில் சபாநாயகர் மற்றும் சபைக்கு தலைவர்

“

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்த யோசனைகள், முன்மொழிவுகளை எதிர்வரும் ஜூன் 19ஆம் திகதிக்கு முன்னர் எழுத்துமூலம் அனுப்பிவைக்குமாறு பாராளுமன்ற விசேட குழு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைய குறித்த குழுவில் யோசனைகளை முன்வைப்பதற்கு எதிர்பார்க்கும் பொது மக்கள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ள அமைப்புக்கள் தமது முன்மொழிவுகளை தபால் மூலம் அல்லது sec.pscelectionreforms2021@parliament.lk என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அனுப்பிவைக்க முடியும் என இந்த விசேட பாராளுமன்ற குழுவின் செயலாளரும் பாராளுமன்ற பணியாட் தொகுதியின் பிரதானியும், பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

முன்மொழிவுகள் மற்றும் யோசனைகளை அனுப்பிவைக்க விரும்புவோர் செயலாளர், பாராளுமன்ற விசேட குழு, இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்

”

நன்றி தெரிவித்ததாகவும் தம்மிக்க தசநாயக்க குறிப்பிட்டார்.

மேலும், தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் இடம்பெறவேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பில் பொதுமக்கள் தமது கருத்துக்களை முன்வைப்பதற்கு ஒரு மாத கால அவகாசம் வழங்குவதற்கு குழு தீர்மானித்ததாக தசநாயக்க தெரிவித்தார்.

அமைச்சர்களான நிமல் சிறிபால டி. சில்வா, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், எம்.யு.எம். அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹஷீம், ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கணேஷன், எம்.ஏ. சுமந்திரன், மதுர விதானகே மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## செய்தி

# சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களை கடுமையாகப் பின்பற்றி பாராளுமன்றம் கூடியது







**சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களை கடுமையாகப் பின்பற்றி மே மாதம் முழுவதும் பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெற்றன. இதற்கமைய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற பணியாளர்கள் மற்றும் ஒன்றிணைந்த பணியாளர்களுக்கு பாதுகாப்பு வழிகாட்டல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.**

பாராளுமன்ற சபா மண்டபம், குழு அறைகள், உணவுக் கூடம், நூலகம் உள்ளிட்ட பாராளுமன்றத்தின் சகல பகுதிகளிலும் இந்த நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் என்பது இந்த சுகாதார வழிகாட்டலின் உள்ளடக்கமாகும். அனைத்துத் தரப்பினரும் பாராளுமன்ற வளாகத்தில் முகக் கவசங்களை அணிந்திருந்ததுடன், பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் சபா மண்டபத்தில் உரையாற்றும்போதும் முகக் கவசத்தை அணிந்திருந்ததைக் காண முடிந்தது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்-19 தொற்றுநோய் சூழலின் மத்தியில் சுகாதார அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்கள் பாராளுமன்றத்தில் கடுமையாகப் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சகல பாராளுமன்ற உறுப்பினரிடமும் மே மாத முதலாவது அமர்வில் கோரிக்கை விடுத்திருந்தார்.

பாராளுமன்றத்துக்கு வெளியே பணியாற்றும்போதும் இதனை பின்பற்றுமாறும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

செய்தி

# கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை சபாநாயகர் சான்றுரைப் படுத்தினார்



பாராளுமன்றத்தில் கடந்த மே 20ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தில் கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப் படுத்தினார்.

மே 27ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு சபாநாயகர் தனது சான்றுரைப்படுத்தலை வழங்கியிருப்பதாக சபாநாயகர் அலுவலகம் தெரிவித்தது.

இதற்கமைய கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டம் மே 27ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது.



# நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு தொடர்பான அமைச்சுசார் ஆலோசனைக் குழு பிரதமர் தலைமையில் கூடியது

**கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு பாராளுமன்றத்தில் நடைபெற்ற நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு தொடர்பான அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.**

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு தொடர்பான அமைச்சுசார் ஆலோசனைக் குழு அதன் தலைவர் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைய செயற்படுவது பொருத்தமானது என பிரதமர் இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

இதற்கு மேலதிகமாக இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (திருத்தம்) சட்டமூலத்தை திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் இக்குழு அனுமதி வழங்கியது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான லொஹான் ரத்வத்த, இந்திக அநுருத்த மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான பிரமித பண்டார தென்னகோன், ஜயந்த கடகொட, சம்பத் அதுகோரல, மிலான் ஜயதிலக, கருணாதாச கொடித்துவக்கு, பிரேம்நாத்.சீ தொலவத்த, கோகிலா குணவர்தன மற்றும் அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

சிறப்புக் கட்டுரை

# அரச நிதிக் கட்டுப்பாடு தொடர்பான பொறுப்புக்கூறல் செயன்முறை, பிரதிநிதித்துவ ஜனநாயகம் மற்றும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு

**பாராளுமன்றம் ஊடாக வருடாந்தம் அரச நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படும் செலவினங்களுக்கான நிதி பயன்படுத்தப்படும் செயன்முறை தொடர்பில் பரிசீலனை செய்வது அத்தியாவசியமாகும். அதற்காக நிறைவேற்றதிகாரத்தை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவதும், பொது மக்களுக்கு பதிலளிப்பதற்கு ஏற்பாடு செய்வதும் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை செயற்படுத்தும் பாராளுமன்றம் மற்றும் விசேடமாக பாராளுமன்ற முறைமையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவுமாகும்.**

மறைமுக ஜனநாயகம் எனும் பிரதிநிதித்துவ ஜனநாயகம், நேரடி ஜனநாயகத்துக்கு மாற்றமானது. நேரடி ஜனநாயகத்தை தற்போதைய பூகோள அரசியலில் பிரயோக ரீதியாக செயற்படுத்த முடியாது. பிரதிநிதித்துவ ஜனநாயக பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதி முறைமை இந்த இரண்டிலும் கலப்பாக மக்களால் மக்களுக்காக தேர்ந்தெடுக்கப்படும் அதேவேளை, மக்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் வகையில் அரசிலமைப்பின் மூலம் கட்டுப்பாடு மற்றும் சமநிலை பொறிமுறையொன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் பிரதான சட்டமான 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் XVII பிரிவின் 148 வது உறுப்புரைக்கு அமைய அரச நிதி தொடர்பான பூரண கட்டுப்பாடு பாரளுமன்றத்துக்கு காணப்படுவது தெளிவானது.

அதேபோன்று 154 வது உறுப்புரைக்கு அமைய, 153 வது உறுப்புரையின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் நாயகத்தின் பதவியின் பணிகளின் கீழ் அனைத்து அரச நிறுவனங்களையும் அரச முயற்சியாண்மைகளையும் கணக்காய்வு செய்வதற்கு பணிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசியலமைப்பின் 154(6) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 8 (ஆ) பிரிவுக்கமைய கணக்காய்வாளர் நாயகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றில் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதன் அவசியமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிறுவனங்களில், அரச நிறுவனங்களின் கணக்காய்வை மேற்கொண்டு அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் (COPA) பரிசீலனைக்காகவும், அரச முயற்சியாண்மைகள் தொடர்பான கணக்காய்வை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (COPE) பரிசீலனைக்காகவும் ஆதரவு வழங்குவதற்கு தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(2) பிரிவுக்கமைய கணக்காய்வாளர் நாயகம் கடமைப்பட்டுள்ளார்.

இலங்கை பாராளுமன்றம் இங்கிலாந்தின் வெஸ்மின்ஸ்டர் சம்பிரதாயத்தை பின்பற்றும் அதேவேளை குழு முறைமை அதன் தனித்துவமான ஒரு அம்சமாகும். பாராளுமன்றத்தில் காணப்படும் பிரதான நிதிசார் குழுக்களில் ஒன்றான அரசாங்க கணக்குகள் பற்றிய குழு, பிற்பட்ட காலத்தில் நாட்டில் ஏற்பட்ட திறந்த பொருளாதார கொள்கையுடன் 1979 இல் உருவாக்கப்பட்ட அரசாங்க முயற்சியாண்மைகளை மேற்பார்வை செய்ய ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு சமாந்தரமாக தற்பொழுது செயற்படுகின்றது. 1921 ஒக்டோபர் 26 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்க கணக்குகள் பற்றிய குழு சிறப்பு நோக்கங்களுக்கான குழுக்களின் கீழ் காணப்படும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பழைமையான குழுவாகும்.









அரசாங்க நிதி எனப்படும் பொது நிதி, நிறைவேற்றதிகாரம் மற்றும் அதனை பிரதிநிதித்துவப்படுத்தும் நிர்வாக பிரிவுகளால் அரசின் நிர்வாக ரீதியான மற்றும் நிதி ரீதியான சட்டதிட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைய பயன்படுத்தப்படுகின்றதா என்பது தொடர்பில் பரிசீலனை செய்யும் சட்டரீதியான அதிகாரத்தை சட்டவாக்கசபையினால், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(2)க்கு அமைய பொதுமக்களின் பிரதிநிதிகளை கொண்ட அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த பரிசீலனையின் போது, குழுவினால் நோக்கப்படும் அல்லது குழுவில் புலப்படும் அரச நிறுவனங்கள் பற்றிய விடயங்கள் தொடர்பில் நிலையியற் கட்டளை 119(3)க்கு அமைய குழுவினால் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், நிலையியற் கட்டளை 119(6) க்கு அமைய தனிநபர்கள், ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை பரிசீலனை செய்யும் அதிகாரமும் குழுவுக்கு காணப்படுகின்றது.

அதற்கமைய, உரிய அரச நிறுவங்களுக்கு ஒதுக்கப்படும் பொது நிதிப் பயன்பாட்டின் நிதி ரீதியான பெறுமதி மற்றும் வினைத்திறனான தன்மை தொடர்பில் தலைமை கணக்காளர் (CAO) மற்றும் கணக்காளர்களின் (AO) பொறுப்புக்கூறல் தொடர்பில் கண்டறிவதும் அது தொடர்பில் புலப்படும் விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதன் ஊடாகவும், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4)க்கு அமைய நிதி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் மற்றும் உரிய நிறுவனங்களுக்கு பொறுப்பான அமைச்சர்களினால் அது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகளை மீண்டும் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுதல் மூலம் நிறைவேற்றதிகாரத்தினால் சட்டவாக்கம் எனப்படும் பிரதிநிதித்துவ ஜனநாயகத்துக்கு நிதி கட்டுப்பாடு தொடர்பான பொறுப்புக்கூறும் தன்மை உறுதிப்படுத்தப்படுகின்றது. இதற்காக தலைமை கணக்காளர் மற்றும் கணக்காளர்களின் பொறுப்புக்கள் தொடர்பில் தேசிய கணக்காய்வு சட்டத்தின் VII ஆம் பிரிவில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. தமது அமைச்சுக்களின் கீழ் காணப்படும் திணைக்களங்களின் நிதி நடவடிக்கைகள் தொடர்பில் குழு எழுப்பும் கேள்விகள் தொடர்பிலான விளக்கங்கள் மற்றும் நியாயப்படுத்தல்களை முன்வைப்பதற்கு தனிப்பட்ட ரீதியில் குழுவின் முன்னிலையில் தோன்றுவது தலைமை கணக்காளரின் பொறுப்பாகும். இந்தக் கட்டுப்பாடுகள் மற்றும் சமநிலை மூலம் பொதுமக்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் தமது கடமைகள் தொடர்பில் நிறைவேற்றதிகாரம் மற்றும் அதிகாரிகளுக்கு பொறுப்புக்கு கூறவேண்டியேற்படுகின்றது.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பொது நிதி ஏன் செலவிடப்பட்டுள்ளது என பார்ப்பதை விட எவ்வாறு செலவிடப்பட்டுள்ளது என பார்ப்பதால் அரசாங்கத்தின் கொள்கை தொடர்பான குணநலன்கள் பரிசீலனை செய்யப்படுவதில்லை. அதேவேளை, குழு முறைமை எந்தவிதத்திலும் நீதிமன்ற முறைமைக்கு மாற்றீடாகவோ அதனை தவிர்ந்து செல்லும் முறைமையாகவோ இருப்பதில்லை. மேலும், அரசாங்க கணக்குகள் பற்றிய குழு அதன் மேற்பார்வை நடவடிக்கைகளில் உரிய நிர்வாக அதிகாரிகளுக்கு பணிப்புரைகளையும் பரிந்துரைகளையும் வழங்கும் நடவடிக்கையை மாத்திரமே மேற்கொள்கின்றது. பொதுவாக அரசாங்கமும் அரச ஊழியர்களும் அரச சேவைகளை வழங்குவது தொடர்பில் பொறுப்பானவர்கள் என்றாலும், தற்போது அரச சேவைகளுக்கான விநியோக வடிவங்கள் மாறுபட்டு காணப்படுவதால், வரி செலுத்துவோரின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் அணுகல் மற்றும் பரப்பு அரச நிறுவனங்களிலிருந்து அப்பாற்பட்டு, அரச நிறுவனங்கள் மற்றும் அரச சேவைகளை வழங்கும் தனியார் நிறுவனங்களையும் பரிசீலனை செய்யும் வகையில் விரிவடைந்துள்ளது. இதற்காக தேசிய கணக்காய்வு சட்டத்தின் மூலம் கணக்காய்வாளர் நாயகத்தின் அதிகாரங்கள், செயல்திறன் மற்றும் சிறப்பு செயல்பாடுகள் தொடர்பில் கணக்காய்வு விரிவுபடுத்தப்பட்டு மக்களுக்கு பெறுமதி சேர்க்கக்கூடிய மேம்பாடுகளை மேற்கொள்ள பரந்தளவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

*களனி திலகரத்ன,*
*பாராளுமன்ற அதிகாரி,*
*அரசாங்க கணக்குகள் பற்றிய குழு அலுவலகம்.*

செய்தி

# பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ.டி.சில்வா அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு நியமனம்



அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு தெரிவுக் குழுவினால், பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ.டி.சில்வாவின் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதாக சாபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் இராமநாயக்கவின் உறுப்புரிமை வறிதாகியதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ.டி.சில்வாவின் பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது.

# சட்டமா அதிபராக சஞ்சய் ராஜரட்ணத்தை நியமிப்பதற்கு பாராளுமன்ற பேரவையில் இணக்கம்

சட்டமா அதிபரின் ஓய்வைத் தொடர்ந்து புதிய சட்டமா அதிபராக பதில் சொலிசிட்ட ஜெனரல், ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய் ராஜரட்ணத்தை நியமிப்பதற்கு அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் மேற்கொண்டிருந்த பரிந்துரைக்கு பாராளுமன்ற பேரவை இணங்கியிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக தெரிவித்தார்.



கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற பேரவைக் கூட்டத்திலேயே இதற்கான இணக்கம் தெரிவிக்கப்பட்டது. கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், ஜனாதிபதி சட்டத்தரணி திரு.சஞ்ஜீவ ஜயவர்தனவை மத்திய வங்கியின் நாணய சபையின் உறுப்பினராக மீண்டும் நியமிப்பதற்கும் பாராளுமன்ற பேரவை பரிந்துரைத்துள்ளது.

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் உறுப்பினர் பதவியில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு திரு.எச். ஜயந்த ஷாந்த குமார விக்ரமரட்னவை நியமிப்பதற்கும் குழு பரிந்துரைத்துள்ளது.

இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் உறுப்பினர் பதவிக்கு ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் டபிள்யூ.பீ.பீ.பெர்னாந்து அவர்களின் நியமனத்துக்கும் பாராளுமன்ற பேரவை பரிந்துரைத்திருப்பதாக செயலாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார்.

கேள்விகள்

# பாராளுமன்ற உறுப்பினர்கள்

# கேள்விகளை எழுப்பும் நடைமுறை



**பாராளுமன்ற சபாமண்டபத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கேள்விகள் கேட்கப்படுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இவ்வகையான கேள்விகள் கேட்கப்படுவதை நீங்கள் காணும்போது, உங்களிடம் எழும் சில வினாக்கள் என்ன? அந்தக் கேள்விகளைக் கேட்பதற்கான அடிப்படை நோக்கம் என்ன? அந்த கேள்விகளை சபாமண்டபத்திற்கு கொண்டு செல்வதற்கான சட்ட செயல்முறை என்ன? இது போன்ற கேள்விகள் பல மனதில் எழும்.**

நிலையியற் கட்டளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட அலுவல்களின்போது பொது விடயங்கள் தொடர்பான கேள்விகள் பிரதம அமைச்சரிடம் எவரேனும் அமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்ட விடயங்களும் பணிகளும் தொடர்பான அமைச்சு ரீதியான பொறுப்பை கொண்டுள்ள அத்தகைய அமைச்சரிடம் கேட்கப்படலாம். இவ்வாறு சபையில் மூன்று முக்கிய வகையான கேள்விகள் கேட்கப்படுகின்றன.

1. வாய்மொழிமூல பதில்கள் எதிர்பார்க்கப்படும் கேள்விகள்
2. வாய்மொழிமூல பதில்கள் எதிர்பார்க்கப்படாத கேள்விகள் மற்றும்
3. பிரதமரிடம் கேட்கப்பட வேண்டிய கேள்விகள் என பிரிக்கப்படுகின்றன.

வாய்மூல விடையினைக் கோரும் கேள்வியொன்று பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் வெளியிடப்படும் சந்தர்ப்பத்தில் ஒழுங்குப் பத்திரத்தில் அக்கேள்விக்குரிய முறை வந்ததும் சபாநாயகர் அக்கேள்விக்குரிய உறுப்பினரின் பெயரை அழைப்பார். அவ்வாறு அழைக்கப்பட்ட உறுப்பினர் தனது இடத்தில் எழுந்து நின்று ஒழுங்குப் பத்திரத்திலுள்ள அக்கேள்வியின் இலக்கத்தை குறிப்பிடுவதன் மூலம் கேள்வியுடன் தொடர்புடைய அமைச்சரிடம் கேட்டல் வேண்டும். அமைச்சர் கேள்விக்கு பதிலளிக்கும்போது கொடுக்கப்பட்ட பதில் தொடர்பாக இரண்டு குறைநிரப்புக் கேள்விகளை கேட்க வாய்ப்பு உள்ளது.

நிலையியற் கட்டளையின் அடிப்படையில் வாய்மொழிமூல விடைக்கான கேள்விகள் எந்தவொரு அமர்விலும் ஒரு மணித்தியாலயத்திற்கு



மேற்படாத நேரம் ஒதுக்கப்படும். கேள்வியொன்றுக்கு எழுத்துமூலம் விடைகோரும்போது அல்லது குறித்த கேள்விக்கு நீண்ட விடை தேவையாகவுள்ளதென சபாநாயகர் அபிப்பிராயப்பட்டால் அக்கேள்வியானது வாய்மொழிமூலமான விடைக்கான கேள்வி அல்ல என கருதப்படும்போது பிரதம அமைச்சர் அல்லது அக்கேள்வி கேட்கப்படும் அமைச்சர் அதற்குரிய விடையை ஹன்சாட் அறிக்கையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அச்சிடுவதற்கு வகைசெய்யப்படும்.

நிலையியற் கட்டளை 38(1) இன் அடிப்படையில் ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது அமர்வு வாரத்தின் புதன்கிழமையன்று வாய்மொழிமூலமான விடைகளிற்காகன கேள்விகளுக்காக பிரதம அமைச்சருக்கு முப்பது நிமிடங்கள் ஒதுக்கப்படும். அவ்வாறு நான்கு கேள்விகள் கேட்கப்படலாம் என்பதோடு ஒதுக்கப்பட்ட ஒரு தினத்தில் தலா இரண்டு கேள்விகள் வீதம் அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் குறித்தொதுக்கப்படும். ஒரு கேள்விக்கு பிரதமர் பதிலளித்த பிறகு, அந்தக் கேள்வியைக் கேட்ட பாராளுமன்ற உறுப்பினர் அல்லது அவரின் விருப்பின்படி வேறு எந்த பாராளுமன்ற உறுப்பினரும் அதிகபட்சம் இரண்டு குறைநிரப்பு கேள்விகளைக் கேட்கலாம்.

பாராளுமன்றத்தில் கேட்கப்படும் கேள்விகளை தொகுத்து வழங்கப்படும் செயல்முறை பாராளுமன்றத்தின் சபை ஆவண அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. கேள்வி எழுப்பும் உறுப்பினர் தனது கையொப்பத்துடன் தொடர்புடைய கேள்வியை சபை ஆவண அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். விதிமுறைகளுக்குட்படாத கேள்விகள் என சபாநாயகர் கருதும் கேள்விகள் தவிர்ந்த ஏனைய கேள்விகள் அறிவிப்பு திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் ஒழுங்கு புத்தகத்தில் சேர்க்கப்படும்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஒரு நாளில் அதிகபட்சம் இரண்டு கேள்விகளை மட்டுமே கேட்க முடியும் என்பதால், ஒரு உறுப்பினர் அதிகபட்சம் இரண்டு கேள்விகள் ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்படும். வழக்கமாக ஒரு மணிநேரம் கேள்விகளுக்கு ஒதுக்கப்படுவதனால் ஒரு நாளைக்கு சுமார் 15 கேள்விகள் ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்படுகின்றது. இவற்றுக்கு மேலதிகமாக வாய்மொழிமூல விடைக்கான கேள்விகளின் இறுதியில் ஒழுங்குப் பத்திரத்தில் இல்லாவிட்டாலும் கூட நிலையியற் கட்டளை27 (2) இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் அல்லது கட்சித் தலைவர் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயம் தொடர்பில் கேள்வியைக் கேட்கலாம்.

கேள்விகள் ஒரு விடயம் தொடர்பாக 150 வார்த்தைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்பட வேண்டும். பிரதமரால் கேட்கப்படும் கேள்விகளில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களாக இருத்தல், அரசாங்கக் கொள்கைகள் தொடர்பான கேள்விகளாக இருக்க வேண்டுமென்பதோடு பொருத்தமான சொற்களற்ற அல்லது தகாத சொல்லமைப்புக்களைக் கொண்ட விடயங்களிலிருந்து விடுபட்டதாக காணப்பட வேண்டும்.

மேலும், நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்படும் விடயங்கள், அத்துடன் ஒரு நபரின் உத்தியோகபூர்வ நிலைமை தொடர்பான விடயங்களும் கேள்வியில் சேர்க்கப்படக்கூடாது.

*நிம்மி ஹாதியல்தெனிய*
*ஊடக முகாமையாளர்*
*தொடர்பாடல் திணைக்களம்*

# கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சபை சட்டமூலம் நிறைவேற்றம்



கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சபை சட்டமூலத்தின் மூன்றாவது வாசிப்பு பாராளுமன்றத்தில் 91 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 149 வாக்குகளும், எதிராக 58 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இரண்டாவது வாசிப்பு வாக்கெடுப்பு 89 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 148 வாக்குகளும், எதிராக 59 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஆதனைத் தொடர்ந்து குழு நிலையின் போது பல்வேறு சரத்துக்கள் திருத்தங்களுடன் சபையில் நிறைவேற்றப்பட்டதுடன், சில சரத்துக்களுக்கு எதிர்க்கட்சியினால் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. அதில் மூன்று சரத்துக்களுக்காக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ.டி.சில்வாவினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களுக்கு வாக்கெடுப்பு கோரப்பட்டிருந்தது. 7, 23 மற்றும் 73 ஆம் சரத்துக்களுக்கு வாக்கெடுப்புக்கள் நடத்தப்பட்டன. இதில் 07வது சரத்து தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் முன்வைத்த திருத்தத்துக்கு ஆதரவாக 46 வாக்குகளும், எதிராக 147 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்ததுடன், 23வது சரத்து தொடர்பான திருத்தங்களுக்கு ஆதரவாக 45 வாக்குகளும், எதிராக 146 வாக்குகளும், 73வது சரத்துக்கான திருத்தங்களுக்கு ஆதரவாக 46 வாக்குகளும், எதிராக 147 வாக்குகளும் அளிக்கப்பட்டன. பல்வேறு திருத்தங்களுக்குத் தமது எதிர்ப்பினையும் குறிப்பிட்டுக் கொள்ளுமாறு எதிர்க்கட்சியினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

செய்தி

# கொழும்பு துறைமுக நரத்தில் முதலாவது முதலீட்டை மேற்கொள்ள இலங்கை முதலீட்டுச் சபை தயார் – அரசாங்க நிதி பற்றிய குழுவில் புலப்பட்டது



**ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டிலான கொழும்பு துறைமுக நகரத்தின் முதலாவது திட்டம் இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையிலபாராளுமன்றத்தில் நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் புலப்பட்டது.**

2025ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்படவுள்ள இந்த கொழும்பு சர்வதேச நிதிசார் நிலையமானது அதன் முதலாவது கட்டத்தில் ஒரு சர்வதேச ஏ தரம் கொண்ட உயர்நிலை அலுவலகக் கோபுரம், இரண்டு உயர்முனை வதிவிடக் கோபுரங்கள் மற்றும் ஒரு சில்லறை நெடுமேடைப் பீடம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். இரண்டாவது கட்டம் இரண்டு சர்வதேச ஏ தரம் கொண்ட உயர்நிலை அலுவலகக் கோபுரங்கள், ஒரு சில்லறை நெடுமேடைப் பீடம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

இருந்தபோதும் பல வரிச்சலுகைகள் வழங்கப்படும் இத்தகைய திட்டங்கள் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்துக்கு நேரடியான பங்களிப்புக்களைச் செலுத்த வேண்டும் என முதலீட்டுச் சபைக்குச் சுட்டிக்காட்டிய அரசாங்க நிதி பற்றிய குழு, இதற்குத் தனது அனுமதியையும் வழங்கியது.
இதனைவிட, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் உட்பகுதியில் எதிர்வரும் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கும் சிலோன் டயர் மெனுபக்ஷரிங் கம்பனி (பிரைவட்) லிமிடட் என்ற பெயரில் ஏற்றுமதித் தரத்திலான டயர்களை உற்பத்தி செய்யும் ஆலைக்கும் அரசாங்க நிதி பற்றிய குழு தனது அனுமதியை வழங்கியது.

இத்திட்டம் 36 மாதங்களுக்குள் அது தனது வர்த்தகத் தொழிற்பாடுகளை ஆரம்பித்தல் வேண்டும். இத்திட்டத்துக்காக நீண்டகால பாரிய வரிச் சலுகைகள் வழங்கப்படுவதால், இதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் அடிமட்டத்தில் உள்ள இறப்பர் உற்பத்தியாளர்களுக்குச் செல்லவிருப்பதாகவும் முதலீட்டுச் சபையின் தலைவர் கலாநிதி சஞ்சய மொஹட்டால, பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்டினார்.

இக்கூட்டத்தில் முதலீட்டுச் சபையின் தலைவர் கலாநிதி சஞ்சய் மொஹட்டால தொழில்திறனுடன் செயற்பட்டுவருவதை பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ.டி சில்வா உள்ளிட்ட குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டியிருந்தனர். அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் அமைச்சர் சரத் வீரசேகர, இராஜாங்க அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, விதுர விக்ரமநாயக, கலாநிதி நாளக கொடஹேவா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, எம்.ஏ.சுமந்திரன், கலாநிதி ஹர்ஷ.டி சில்வா, நளின் பண்டார, அனுப பஸ்குவல், பேராசிரியர் ரஞ்சித் பண்டார, இசுறு தொடங்கொட, சஹன் பிரதீப் ஆகியோர் கலந்துகொண்டனர்.





சிறப்புக் கட்டுரை

# இலங்கைப் பாராளுமன்றத்தின் இறையான்மை மற்றும் சட்டவாக்க செயன்முறைகள்

**கடந்தகாலங்களையும் உள்ளடக்கும் சட்டங்களையும் அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டை நீக்கும் அல்லது திருத்தும் அல்லது அரசியலமைப்புக்கு ஏதேனும் புதிய ஏற்பாட்டை சேர்க்கும் சட்டங்கள் உட்பட்ட சட்டங்களை ஆக்குவதற்கு பாராளுமன்றம் தத்துவம் கொண்டுள்ளது.**

அரசியலமைப்பை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ இடைநிறுத்திவைக்கின்ற ஏதேனும் சட்டத்தை அல்லது இயற்றப்படுகின்ற சட்டமானது ஏலவேயுள்ள அரசியலமைப்பை மாற்றீடு செய்கின்ற அரசியலமைப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குகின்ற ஏதேனும் சட்டத்தை பாராளுமன்றம் ஆக்குதலாகாது. அரசியலமைப்பின் 13 வது திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில், பாராளுமன்றத்தின் சட்டவாக்கப் பணிகள் மற்றும் இலங்கையின் தற்போதைய இறையாண்மை தொடர்பில் ஒரு பரந்த விவாதம் இடம்பெற்றது. அதன்படி, அரசியலமைப்பின் பிரிவு 154 (உ) (2) மற்றும் (3) இன் கீழ் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தின் இறையாண்மையை கட்டுப்படுத்தலாகாது.

அரசியலமைப்பின் 76 வது பிரிவு பாராளுமன்றம் அதன் சட்டமாக்கற்றத்துவத்தைத் துறத்தலோ எவ்விதத்திலும் பராதீனப்படுத்தலோ ஆகாது என்பதுடன் ஏதேனும் சட்டமாக்கற்றத்துவம் கொண்ட ஏதேனும் அதிகாரத்தை நிறுவுதலுமாகாது என்று குறிப்பிடுகின்றது. ஆனாலும் அரசியலமைப்பின் 76 (3) வது பிரிவு விதிக்கப்பட்ட நோக்கங்களுக்காகத் துணைநிலை சட்டங்களை ஆக்குவதற்கு எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு தத்துவமளிக்கின்ற ஏதேனும் ஏற்பாட்டை கொண்ட சட்டத்தை பாராளுமனன்றம் இயற்றலாம் என்கின்றது.

அரசின் பிரதான சட்டமன்ற உறுப்பாக விளங்கும் சட்டமன்றத்தின் முதன்மை செயல்பாடு சட்டவாக்க செயல்முறையாகும். அதன்படி அனைத்து சட்வாக்க முன்மொழிவுகளும் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அத்தகைய அரசு சட்டமூலங்களை நிறைவேற்றும் சாதாரண நடைமுறைக்கு ஏற்ப அரசு சட்டமூலமொன்றை அமைச்சரவை அமைச்சர் மட்டுமே முன்வைக்க முடியும்.

அரசியலமைப்பின் சட்டப்பிரிவு 76 இன் அடிப்படையில் குறிப்பிட்ட சட்டமூலம் அரசியலமைப்பை மீறியுள்ளதா என்பதை சட்டமா அதிபர் ஆராய்வார். அதன்படி, சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் அடங்கிய சட்டமூலம் அமைச்சரவையின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டு, அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட சட்டமூலம் அரசியலமைப்பின் 78 ஆவது பிரிவின்படி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் ஏழு நாட்களுக்குள் ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்படும்.

பாராளுமன்றத்தில் ஒரு சட்டமூலத்தை அறிமுகம் செய்து நிறைவேற்றும் செயல்முறை முதலாவது வாசிப்பு, இரண்டாவது வாசிப்பு மற்றும் மூன்றாவது வாசிப்பு ஆகிய மூன்று நிலைகளைக் கொண்டுள்ளது.

மேற்கண்டவாறு சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து, சட்டமூலத்தின் சுருக்கப் பெயர் சம்பந்தப்பட்ட அமைச்சரால் வாசிக்கப்படும். குறித்த சட்டமூலத்தின் முழுமையான நீண்ட பெயரை பாராளுமன்ற செயலாளர் நாயகம் வாசித்தலே முதலாவது வாசிப்பு என்று அழைக்கப்படுகிறது.

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி முதலாவது வாசிப்புக்குப் பிறகு ஏழு நாட்களுக்குப் பிறகு, சட்டமூலம் நிலையியற் கட்டளை 50 (1) மற்றும் 55 (1) இன் கீழ் இரண்டாவது வாசிப்புக்காக முன்வைக்கப்படுகின்றது.

அதன்படி சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்துக்குள்ள நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்குமாறு சனாதிபதி, பிரதம நீதியரசருக்கு முகவரியிட்டு அனுப்பப்பட்ட எழுத்திலான ஆற்றுகை மூலம் வேண்டலாம். அல்லது எவரேனும் பிரசை உயர்நீதிமன்றத்திற்கு முகவரியிட்டு அனுப்பப்பட்ட எழுத்திலான மனுவொன்றின் மூலம் வேண்டலாம். சட்டலமானது பாராளுமன்றத்தின் நிகழ்ச்சித்தாளில் சேர்க்கப்பட்ட ஒரு வாரத்துக்குள்ளாக அத்தகையை ஆற்றுப்படுத்துகை செய்யப்படுதல் வேண்டும்.

அதன்படி நிலையியற் கட்டளை 55 (2) இன்படி அத்தகைய ஆற்றுப்படுத்தலின் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்கு தெரிவிக்கப்படும்வரை அல்லது அத்தகைய ஆற்றுப்படுத்தலோ மனுத்தாக்கலோ செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று வாரங்கள் முடியும்வரை சட்டமூலம் தொடர்பாக எந்நடவடிக்கையும் எடுக்கப்படலாகாது.

இரண்டாவது வாசிப்பானது சட்டமூலத்தின் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கும் முக்கியமான விவாதமாகும். அதன்படி, இரண்டாவது வாசிப்பில் சட்டமூலத்தின் நோக்கம் மற்றும் கொள்கைகளை உள்ளடக்கிய வகையில் விவாதிக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இறுதியாக இரண்டாவது வாசிப்புக்கு விரும்பினால், வாக்கெடுப்பை கோரலாம். இதுபோன்ற சந்தர்ப்பத்தில் நிலையியற் கட்டளை பிரிவு 47 க்கு இணங்க 5 நிமிடங்களுக்குப் வாக்கழைப்பு மணி அடிக்கப்படும். பின்னர் வரிசை வரிசையாக எண்ணுவதன் மூலமோ இலத்திரனியல் வாக்கெடுப்பு மூலமாகவோ வாக்கெடுப்பு நடத்தப்படும்.

சட்டமூலமொன்று இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டதும் (ஒதுக்கீட்டு சட்டமூம் தவிர்ந்த) நிலையியற் கட்டளை பிரிவு 57 இன் அடிப்படையில் அமைச்சரவையின் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினரல்லாத அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் ஒருவரினால் பிரேரிக்கப்படும் பிரேரணையின்மேல் அச்சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். முழுப் பாராளுமன்றக் குழுவிற்கு முன்வைக்கப்படும்போதான நடைமுறைகள் நிலையியற் கட்டளை 93 தொடக்கம் 99 வரையான பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முழுப் பாராளுமன்றக் குழுவின் விடயத்தில், சபாநாயகர் தனது சபாநாயகர் இருக்கையை விட்டு இறங்கி, முழுப் பாராளுமன்றக் குழுவின் தவிசாளராக பாராளுமன்ற செயலாளர் நாயகம் அமர்ந்திருக்கும் இடத்தில் அமருவார். இதன்போது பாராளுமன்றத்தின் அதிகாரச் சின்னமாக திகழும் செங்கோல் மேல் தட்டிலிருந்து கீழ்தட்டில் வைக்கப்படும்.

சட்டமூலத்தின் அனைத்து உபபிரிவுகளும் முழு பாராளுமன்றக் குழுவில்க் குழுவில் பரிசீலிக்கப்பட்டு தேவைப்பட்டால் அந்த உட்பிரிவுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படலாம். முழு பாராளுமன்றக் குழுவால் சட்டமூலம் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு திருத்தம் தேவைப்படும் உட்பிரிவுகளுக்கு வாக்குகளிப்பைக் கோரவும் முடியும். முழுப் பாராளுமன்றக் குழுவில் சட்டமூலம் பரிசீலித்து முடிந்தவுடன் தவிசாளர் மீண்டும் சபாநாயகரின் ஆசனத்தில் அமர்ந்ததன் பின்னர் மீண்டும் கீழ் தட்டில் வைக்கப்பட்டிருக்கும் செங்கோல் மேல் தட்டிற்கு வைக்கப்படும். அதன் பின்னர் தவிசாளர் அச்சட்டமூலத்தை திருத்தங்களுடனோ அல்லது திருத்தங்களின்றியோ பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

அதன்பின்னர் மூன்றாவது வாசிப்பில் முழு பாராளுமன்றக் குழு பரிசீலிக்கப்பட்ட சட்டமூலத்திலுள்ள அனைத்து உட்பிரிவுகள் மற்றும் திருத்தங்களுக்கு பாராளுமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். மற்றும் தேவைப்பட்டால் வாக்கெடுப்புக்கு கோரப்படலாம். நிலையியற் கட்டளை 47 இன் பிரகாரம் குரல்களிலிருந்து வாக்கெடுப்பு அல்லது இலத்திரனியல் வாக்குக்கருவியை பயன்படுத்துவதன் மூலம் அனுமதி பெறப்படவேண்டும்.

அரசியலமைப்பின் 79 ஆவது மற்றும் 80 ஆவது பிரிவு மற்றும் நிலையியற் கட்டளை 74 இன் அடிப்படையில் சபாநாயகரின் சான்றுரைப்படுத்தலே சட்டமூலம் சட்டமாக நிறைவேற்றுவதற்கான செயன்முறையின் இறுதி கட்டமாகும்.

அரசு சட்டமூலங்கள் பல்வேறு நோக்கங்களுக்காக அறிமுகப்படுத்தப்படுகின்றன. மேலும் அத்தகைய சட்டமூலங்கள் சாதாரண சட்டமூலங்கள், அரசியலமைப்பு திருத்த சட்டமூலங்கள், ஒதுக்கீட்டு சட்டமூலம் என தனித்தனியாக அறிமுகப்படுத்த முடியும். இவ்வாறு சட்டமூலங்கள் வெவ்வேறு குணாதிசயங்களைக் கொண்டிருந்தாலும் அவை பல படிநிலைகளுக்குப் பிறகு நிறைவேற்றப்படுகின்றன.

*மாதவி ரங்கேபண்டார*
*ஊடக அதிகாரி*
*தொடர்பாடல் திணைக்களம்*

செய்தி

# தேசிய இறைவரி திணைக்களம் 2021 ஆம் ஆண்டு முதல் மூன்று மாதங்களில் வரி வருமான இலக்கில் 98 வீதத்தைப் பூர்த்திசெய்துள்ளது – அரசாங்க நிதி பற்றிய குழுவில் புலப்பட்டது






**புதிய வரி திருத்தத்துடன் நிதி அமைச்சினால் தேசிய இறைவரித் திணைகளத்துக்கு வழங்கப்பட்ட இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களுக்கான வரி இலக்கான 575.5 மில்லியன் ரூபாவில் 98 வீதம் பூர்த்திசெய்யப்பட்டிருப்பது பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் அண்மையில் கூடிய அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் புலப்பட்டது.**

உலகம் கொவிட் சவாலுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில் குறித்த இலக்கை அடைந்தமை குறித்து தேசிய இறைவரித் திணைக்களத்துக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்த அரசாங்க நிதி பற்றிய குழு, வரி செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

2018ஆம் ஆண்டு 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திருத்தங்கள் அரசாங்க நிதி பற்றிய குழுவில் கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்கண்ட விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

ஐந்து வருடங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தப் புதிய வரித் திருத்தத்துக்கு அமைய வரி செலுத்த வேண்டிய தனிநபர்களின் வருமான எல்லை 5 இலட்சம் ரூபாவிலிருந்து 3 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து வரி செலுத்துபவர்கள் முழுமையாக விடுவிக்கப்படுவதற்கு இந்தப் புதிய வரித்திருத்தத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். அறவிடப்படாத வரி வருவாயை சேமிப்பாக மாற்றுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றபோதும், ஊக்குவிக்கப்பட வேண்டிய தொழில்துறைகள் குறித்து அவதானமாக இருக்க வேண்டும் என அதிகாரிகள் சுட்டிக்காட்டியிருப்பதாகவும் குழு தெரிவித்தது.

உள்நாட்டு உற்பத்தி மற்றும் முதலீட்டை அதிகரிப்பதற்கும், திரைப்படக் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்களை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கும் தேசிய இறைவரித் திணைக்களம் காண்பிக்கும் அக்கறைக்கு மதிப்பளிப்பதாகவும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் அனுர பிரியதர்ஷன யாப்பா மேலும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் சரத் வீரசேகர, இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, விதுர விக்ரமநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, பேராசிரியர் ரஞ்சித் பண்டார, இசுறு தொடங்கொட, நளின் பண்டார ஆகியோரும், தலைவரின் அனுமதியுடன் பாராளுமன்ற உறுப்பினர் சமன் பிரிய ஹேரத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

**செய்தி**

# பாராளுமன்ற சம்பிரதாயத்துக்கு மதிப்பளித்து அதிமேதகு ஜனாதிபதி பாராளுமன்றத்துக் விஜயம்



**அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் மே 05ஆம் திகதி முற்பகல் 10.05 மணிக்கு பாராளுமன்றத்துக்கு விஜயம் செய்தார்.**
**ஆளும் கட்சியின் முதற்கோலாசான் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாந்து, இராஜாங்க அமைச்சர்களான கனக்க ஹேரத், டி.வி.சானக ஆகியோர் பாராளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலில் அதிமேதகு ஜனாதிபதியை வரவேற்றனர்.**

அதனைத் தொடர்ந்து ஆளும் கட்சியின் முதற்கோலாசான் ஜோன்ஸ்டன் பெர்னாந்து உள்ளிட்ட அமைச்சர்களுடன் பாராளுமன்ற சபை மண்டபத்துக்கு வந்த ஜனாதிபதி அவர்கள், கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மற்றும் சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோருடன் சபையில் அமர்ந்தார்.

ஜனாதிபதி அவர்கள் சபையில் அமர்ந்திருந்தபோது வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன உரையாற்றினார்.

சிறிது நேரத்தில் சபையிலிருந்து வெளியேறிய ஜனாதிபதி பாராளுமன்றத்தில் உள்ள தனது அலுவலகத்துக்குச் சென்று சில நிமிட நேரங்கள் அங்கிருந்தார்.

கடந்த ஏப்ரல் 08ஆம் திகதி ஜனாதிபதி, அவர்கள் பாராளுமன்றத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்ததுடன், பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் முதல் தடவையாக பாராளுமன்ற அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுக்கு அவர் தலைமை தாங்கினார்.

இதற்கு முன்னர் கடந்த பெப்ரவரி 11ஆம் திகதி அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருந்ததுடன், சபை நடவடிக்கைகளிலும் கலந்துகொண்டிருந்தார்.

**செய்தி**

# எவ்வாறான சவால் மிகுந்த தருணத்திலும் ஆயிரக்கணக்கான உயிர்களை தியாகம் செய்து பெற்றுக் கொண்ட வெற்றியைக் காட்டிக் கொடுக்க மாட்டோம் - பிரதமர் தெரிவிப்பு



**மனிதாபிமான செயற்பாட்டின் போது காயமடைந்த போர் வீரர்கள் பெற்றுக் கொண்ட சொத்துக் கடன்களுக்கான வட்டியை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கடந்த 18ஆம் திகதி, மனிதாபிமான வெற்றி தினத்தை முன்னிட்டு பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றும்போது கூறினார்.**

“இன்று விசேடமானதொரு நாளாகும். நாம் முப்பது ஆண்டு கால பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து இல்லாதொழித்து இன்றுடன் பன்னிரண்டு ஆண்டுகளாகின்றன. 2009 மே மாதம் 18ஆம் திகதி இந்த நாட்டின் அனைத்து மக்களும் தேசியக் கொடிகளுடன் வீதியில் இறங்கி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தமை எனக்கு நன்கு நினைவிருக்கிறது. அந்த வெற்றி நாட்டின் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் கிடைத்த வெற்றி அல்ல. பயங்கரவாதிகள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்திய நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட பணயக் கைதிகளை நாங்கள் விடுவித்தோம்.

வடக்கு, கிழக்கிலுள்ள எமது மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து, ஆண்டுக்கு ஓரிரு தடவை தாம் வாழ்ந்த வீடுகளை கைவிட்டு, மூட்டை முடிச்சுக்களுடன் உயிரை மாத்திரம் கையில் பிடித்துக் கொண்டு ஒவ்வொரு இடமாக அலைந்து திரிந்த யுகத்தை நாம் முடிவுக்கு கொண்டு வந்தோம்.
வடக்கு, கிழக்கு மக்கள் அகதிகளாக அலைந்து திரிந்த யுகத்தை நாம் முடித்து வைத்தோம். சுமார் 20 ஆண்டுகளாக அநாதை இல்லங்களில் வாழ்ந்த கிழக்கு மக்களுக்கு, தங்கள் வீடுகளுக்கு சென்று கௌரவமாக வாழ வழியமைத்தோம்.

இவ்வெற்றி இந்த உயரிய சபை பெற்ற பாரிய வெற்றியாகும். பயங்கரவாதிகள் முதலில் மக்கள் பிரதிநிதிகளையே இலக்கு வைத்தனர். துரையப்பா, அமிர்தலிங்கம், சாம். தம்பிமுத்து முதல் மக்கள் பிரதிநிதிகள் பலர் உயிரிழந்தனர். இந்த சபையை பிரதிநிதித்துவப்படுத்திய ஆர்.பிரேமதாச, லக்ஷ்மன் கதிர்காமர், காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, த.மு.தசநாயக்க, சீ.வி.குணரத்ன உள்ளிட்ட மக்கள் பிரதிநிகள் பலரது உயிரை பயங்கரவாதிகள் பறித்துக் கொண்டனர். இச்சபைக்கு வரும் மக்கள் பிரதிநிதிகளுக்கே அதிகளவு மரண அச்சம் காணப்பட்டது.

அன்று போருக்குச் சென்ற எவரும் இனப் படுகொலை நிகழ்த்துவதற்காக அங்கு செல்லவில்லை. அன்று பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட, முன்னாள் விமானப்படை தளபதி ரொஷான் குணதிலக ஆகியோர் இனப்படுகொலை நிகழ்த்துவதற்காக தங்களது படைகளை வழிநடத்தியவர்களல்ல.

அன்றிருந்த சாதாரண மக்களின் பிள்ளைகளையே உலகின் சிறந்த போர் வீரர்களாக மாற்றினோம். கிராம காவலர்களாக இருந்தவர்கள் சிவில் காவலர்களாக

மாற்றப்பட்டனர். அரசாங்க பாதுகாப்பு வீரர்களாக கருதப்பட்டவர்கள் போர் வீரர்களாக மாற்றப்பட்டனர். அவர்களுக்காக தனி மருத்துவமனைகள் கட்டப்பட்டன. தனி பாடசாலைகள் கட்டப்பட்டன. உலக இராஜதந்திர சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். பொதுச் சேவையில் உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டனர். சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் இழப்பீடு மூலம் அவர்களின் அந்தஸ்தை உயர்த்தினோம்.

இதேவேளை, மனிதாபிமான செயற்பாட்டின் போது காயமடைந்த போர் வீரர்கள் பெற்றுக் கொண்ட சொத்துக் கடன்களுக்கான வட்டியை நீக்கவும் நாங்கள் முடிவு எடுத்துள்ளோம். இராணுவத்தினர் சுகாதார வீரர்களாக மாறி இன்று அவர்கள் நாட்டை தொற்றுநோயிலிருந்து காப்பாற்ற போராடுகிறார்கள். நாட்டையும் தேசத்தையும் காட்டிக் கொடுத்த சக்திகள் அப்போது போரில் எங்களுக்கு எதிராக இருந்ததைப் போன்று இன்றும் தொற்றுக்கு எதிராக முப்படையினரை ஈடுபடுத்துவதனை எதிர்த்து வருகின்றனர்.

உலகின் மிக மோசமான பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போராடுவதன் மூலமும், உலகின் மிக மோசமான தொற்றுநோயை எதிர்கொள்வதன் மூலமும் இந்த போர்வீரர்கள் உலகிற்கு ஒரு முன்மாதிரியாக செயற்படுவார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளக் கூடியவர்களாக முப்படையினர், சிவில் பாதுகாப்புப் படை வீரர்களை நாங்கள் நிறுத்தியுள்ளோம். இன்று போன்ற ஒரு நாளில் நான் அதைப் பற்றி பெருமைப்படுகிறேன்" என்றும் அவர் தெரிவித்தார்.

**செய்தி**

# பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் கௌரவ சபாநாயகரைச் சந்தித்தார்



***இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் திரு.தாரிக் அரி∴புல் இஸ்லாம் அவர்கள், கௌரவ சாபாநயகர் மஹிந்த யாப்பா அபேர்தனவை மரியாதையின் நிமித்தம் சந்தித்தார்.***

இரு நாடுகளிலும் காணப்படும் கொவிட் தொற்றுநோய் சூழல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. எப்பொழுதும் இலங்கையின் நட்பு நாடாக விளங்கும் பங்களாதேஷ் தொடர்ச்சியாக வழங்கிவரும் ஒத்துழைப்புக்கு சபாநாயகர் தனது பாராட்டைத் தெரிவித்தார்.

இலங்கையின் கைத்தறி தொழில்துறையின் அபிவிருத்தி மற்றும் நுண்நிதி கடன் விவகாரங்கள் போன்ற விடயங்களில் வழிகாட்டல்களை வழங்க பங்களாதேஷ் தயாராக இருப்பதாக உயர்ஸ்தானிகர் இங்கு குறிப்பிட்டார்.

பல துறைகளில் குறிப்பாக ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகளில் பல்வேறு இலங்கையர்கள் உயர் பதவிகளை வகிப்பதன் ஊடாக பங்களாதேஷின் பொருளாதாரத்துக்கு வழங்கிவரும் ஒத்துழைப்புக்கும் உயர்ஸ்தானிகர் பாராட்டைத் தெரிவித்தார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இலங்கை-பங்களாதேஷ் நட்புறவு சங்கத்தை அமைப்பது கொவிட் சூழல் காரணமாக காலதாமதமாவதாகவும், இதன் பின்னர் இரு நாட்டு உறவுகள் பலப்படும் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

செய்தி



# வெற்றிகொண்ட சமாதானத்தை நீண்டகாலம் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர்

**வெற்றிகொண்ட சமாதானம் மற்றும் சுதந்திரத்தை நீண்டகாலம் பேணுவதற்கு உரிய வேலைத்திட்டம் அவசியம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். மனிதாபிமான நடவடிக்கையின் வெற்றி தினத்தை முன்னிட்டு பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

நாட்டின் இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கு பாதுகாப்பு வீரர்கள் முன்னெடுத்த நடவடிக்கை விலைமதிப்பற்றது என்றும் அவர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

“இன்று படைவீரர்களுக்கான தினமாகும், விசேடமாக எமது நாட்டில் இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் அரசியல் சுதந்திரம் ஆகியவற்றைப் பலப்படுத்துவதற்காக செயற்பட்ட எமது படைவீரர்களை ஐக்கிய மக்கள் சக்தி சார்பிலும், எதிர்க்கட்சி சார்பிலும் இச்சந்தர்ப்பத்தில் நாம் நினைவுகூறுகின்றோம். கௌரவ சபாநாயகர் அவர்களே வெற்றிகொண்ட சமாதானம் மற்றும் சுதந்திரத்தை நீண்டகாலம் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமது உடலையும் உயிரையும் தியாகம் செய்த அந்த இராணுவத்தினர், விதவைகள், அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள் மற்றும் ஏனைய இராணுவத்தினருக்கு வழங்கக்கூடிய உயர்ந்த ஆதரவை வழங்குமாறு முதலாவதாக நான் யோசனை முன்வைக்கின்றேன். அதற்கான ஆதரவை வழங்க நாம் தயாராகவுள்ளோம். விசேடமாக இந்த இராணுவ வீரர்கள் இந்த நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தவே தமது உயிர்களை தியாகம் செய்தனர். அதற்காக நாம் அர்ப்பணிக்க வேண்டும். ஒருமித்த நாட்டில் 13 வது அரசியலமைப்பு சீர்த்திருத்தம் அவ்வாறே செயற்படுத்தப்பட வேண்டும் என நான் இங்கு குறிப்பிடுகின்றேன்” என்றார்.

# அதிகாரிகள் தகவல்



டபிள்யு.பி.எல். ஜயசிங்க
பிரதான உத்தியோகத்தர் - தாபன அலுவலகம்
நிருவாகத் திணைக்களம்

1994 ஆம் ஆண்டு பாராளுமன்ற சேவையில் டபிள்யு.பி.எல். ஜயசிங்க அவர்கள் பேராதனை பல்கலைக்கழக விஞ்ஞானத் துறை பட்டதாரியாவார். அவர் அதே பல்கலைக்கழகத்தின் கணினித்துறை விஞ்ஞான பட்டப்பின் பட்டதாரியுமாவார்.

அவர் வழங்கல் மற்றும் சேவைகள் அலுவலகம், தாபன அலுவலகம், அரசாங்க கணக்குகள் மற்றும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு அலுவலகம், நிதி மற்றும் கணக்குகள் அலுவலகம் என்பவற்றில் நீண்ட காலம் பியாற்றியுள்ளார். அவர் இந்தியா, சீனா, மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய நாடுகளில் பாராளுமன்ற முறைமை தொடர்பில் இடம்பெற்ற பல பயிற்சிப் பட்டறைகளிலும் மாநாடுகளிலும் கலந்துகொடுள்ளமை சிறப்பம்சமாகும்.

டபிள்யு.பி.எல். ஜயசிங்க அவர்கள் தற்பொழுது இலங்கை பாராளுமன்றத்தில் தாபன அலுவலகத்தில் பிரதான உத்தியோகத்தராக பணியாற்றி வருகின்றார். அவர் கொழும்பு ரோயல் கல்லூரியின் பழையமானவராவார்.

---



ஸியாத் அஹமத்
நூலகர்
இலங்கை பாராளுமன்றம்

2008 ஆம் ஆண்டில் உதவி நூலகராக பாராளுமன்ற சேவையில் இணைந்த ஸியாத் அஹமத் அவர்கள் பேராதனை பல்கலைக்கழக பட்டதாரியாவார். அவர் இந்தியாவின் மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பு பல்கலகைக்கழகம் நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானம் துறை பட்டபின் பட்டதாரியுமாவார்.

அவர் இலங்கை நூலக சங்கத்தின் நூலகம் மற்றும் தாவல் விஞ்ஞான டிப்ளோமா, கணினி மற்றும் தகவல் தொழிநுட்ப டிப்ளோமா, இந்திய டில்லி நகர சார்க் ஆவண மையத்தின் நூலக முகாமையாளர்களுக்கான தகவல் தொழிநுட்பமுறைமை தொடர்பான பயிற்சி நெறி, இந்தியாவில் இடம்பெற்ற 35வது வெளிநாட்டு பாராளுமன்ற அதிகாரிகளுக்கான பயிற்சி உள்ளிட்ட பயிற்சிநெறிகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளில் பங்குபற்றியுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை நூலக சங்கத்தின் வருகைதரு விரிவுரையாளராக ஸியாத் அஹமத் அவர்கள் பணியாற்றிவருகின்றமை விசேட அமசமாகும். சிங்கப்பூர், மலேசிய, தென் கொரியா உள்ளிட்ட பல நாடுகளில் வெளிநாட்டு பயிற்சிகளிலும் அவர் பங்குபற்றியுள்ளார்.

அவர் பல பதிப்புகளின் நூலாசிரியராகவும் உள்ளத்துடன் பல்வேறு சர்வதேச மாநாடுகளில் ஆய்வறிக்கைகளையும் சமர்ப்பித்துள்ளார்.

தற்பொழுது இலங்கை பாராளுமன்றத்தின் நூலகராக பணியாற்றிவரும் ஸியாத் அஹமத் கல்முனை சாஹிரா கல்லூரியின் பழைய மாணவராவார்.

# பிரதான நுழைவாயில்



இது பாராளுமன்ற வளாகத்தின் பிரதான நுழைவாயிலாகும். பாராளுமன்றத்தின் சம்பிரதாய பூர்வமான நிகழ்வுகளின்போது மட்டுமே இந்தக்கதவு திறந்திருக்கும். இக்கதவு செப்பினால் ஆனது. பாராளுமன்றம் கூடும் சாதாரண நாட்களில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பிரவேசிக்கும்போது மட்டுமே பிரதான நுழைவாயிலின் இருபுறமும் உள்ள இரு பக்க கதவுகளும் திறந்திருக்கும்.



பிரதான நுழைவாயிலின் முகப்பு

வாயிலின் உள்ளே நான்கு செப்பிலான சிங்க தூண்கள் காணப்படுகின்றன. இலங்கை பாராளுமன்றத்திற்கு வருகை தருபவர்களின் வரவேற்பை இந்த சிங்கங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்ற ஒருமித்த பொதுவான கருத்து நிலவுகின்றது. இது 13 ஆம் நூற்றாண்டு பாணியில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.


## ஆசிரியர் குழாம்

| | |
|---|---|
| ஆலோசனை | திரு. தம்மிக தஸநாயக்க<br>*(பாராளுமன்ற செயலாளர் நாயகம்)* |
| | திருமதி. குஷானி ரோஹனதீர<br>*(பிரதிச் செயலாளர் நாயகம், பணியாட்தொகுதி பிரதானி)* |
| | திரு. டிகிரி கே.ஜயதிலக<br>*(உதவிச் செயலாளர் நாயகம்)* |
| எண்ணக்கரு மற்றும் வழிகாட்டல் | திரு. ஷான் விஜேதுங்க |
| தொகுப்பு | புத்தினி ராமநாயக்க<br>எதிரிவீர குணசேகர<br>நிம்மி ஹாத்தியல்தெனிய |
| தொகுப்பில் உதவி | ஆசிரி ஜயலத்<br>பி.ருத்ரகுமார் |
| மொழிபெயர்ப்பு | எம்.பிரசாத்<br>ஏ.ஜீ.எம்.எம்.நுஸ்கி<br>பா.ருத்ரகுமார் |
| புகைப்படம் | நுவன் துமிந்த |
| பக்கவடிவமைப்பு | இஷாரா விக்ரமசிங்ஹ |
| இணையம் ஊடாக விநியோகம் | ஏ.ஜீ.எம்.எம்.நுஸ்கி |



பாராளுமன்ற செய்தி, செய்திமடலில் பங்களிப்புச் செய்வதற்கு உங்களுக்கும் சந்தர்ப்பம் உள்ளது. “பாராளுமன்றம்” என்ற தொனிப்பொருளின் கீழான தலைப்புக்களில் கட்டுரைகளை எழுதுவதற்கான வாய்ப்பு உள்ளது.

sriparliament@gmail.com
தொடர்பு - 0112 777 328

தொடர்பாடல் திணைக்களம்,
இலங்கை பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர,
கோட்டே

தொலைபேசி : +94 11 2777100
தொலைநகல் : +94 11 2777227

Parliament of Sri Lanka

@ParliamentLK

@slparliament

Parliament of Sri Lanka